# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2200/2 - 2020 නොවැම්බර් මස 02 වැනි සඳුදා - 2020.11.02

*2200/2 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

*எனது இல. :- 01/10/03/04*

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்படும் நியமனங்கள்

*1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 32 (1) ஆம் பிரிவின் கீழ், ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில் ஆகிய எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்களை செய்துள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

1. *இலங்கை பொறியியல் சேவையின் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எம். ரீ. ஜீ. ஏ. என். லக்மால் அவர்கள், 2020.09.07 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில், ஒரு வருட காலப்பகுதிக்கு ஊவா மாகாண பொறிமுறை பணிப்பாளராக பதில் கடமையாற்ற.*

2. *இலங்கை கமத்தொழில் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி எல். எச். பீ. நில்மினி அவர்கள், தனது நிரந்தர பதவியின் பணிகளுக்கு மேலதிகமாக உடனடியாக செயற்படும் வகையில் (2020.09.15 ஆந் திகதி முதல்) பதுளை மாவட்டப் பிரதி கமத்தொழில் பணிப்பாளராக (பரவலாக்கம்) பதில் கடமையாற்ற.*

3. *இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. ஜீ. ஜீ. என். குணரத்ன அவர்கள், உடனடியாகச் செயற்படும் வகையில் (2020.09.21 ஆந் திகதி முதல்), ஊவா மாகாண ஆளுநரின் செயலாளராக.*

4. *இலங்கை நிர்வாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திருமதி ஜீ. ஏ. எம். எஸ். பீ. அபன்வெல அவர்கள், ஊவா மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் சமாதானமும், கல்வி (தமிழ் பாடசாலைகள் தவிர்ந்த) மாகாண உள்ளூராட்சி, மின்சக்தியும், வலுசக்தியும், நிர்மாணத்துறை, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் காணி தொடர்பான அமைச்சின் செயலாளராக ஒப்பந்த அடிப்படையில் மீள் சேவைக்கமர்த்தல் அடிப்படையில் 2020.10.09 ஆந் திகதி முதல் 2021.10.08 ஆந் திகதி வரை ஒப்பந்த சேவை காலத்தை நீடித்தல்.*

5. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. டி. எம். ரத்னாயக அவர்கள், உடனடியாகச் செயற்படும் வகையில் (2020.10.06 ஆந் திகதி முதல்), ஊவா மாகாண கல்விப் பணிப்பாளராக பதில் கடமையாற்ற.

6. இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஆர். எம். எஸ். டி. ரத்னாயக அவர்கள், உடனடியாகச் செயற்படும் வகையில் (2020.10.15 ஆந் திகதி முதல்), ஊவா மாகாண வீடு ஆணையாளராக பதில் கடமையாற்ற.

7. இலங்கை நிர்வாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. சீ. அத்தரவத்த அவர்கள், 2020.08.25 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் தனது நிரந்தரப் பதவியின் பணிகளுக்கு மேலதிகமாக ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கங்கள் பதிவாளர் பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்கு.

**ஏ. ஜே. எம். முஸம்மில்,**
ஊவா மாகாண ஆளுநர்.

ஊவா மாகாண ஆளுநரின் அலுவலகம்,
2020, ஒற்றோபர் 29.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.